**Dated : 01.08.2025**

**O.S.No. 361/2022**

**DW.3 – திரு. சோமசுந்தரம் (எ) கோபி**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

வாதியும், பிரதிவாதியும் வசிக்கும் ஊருக்கும், நான் வசிக்கும் இடத்திற்கான தொலைவு எவ்வளவு என்றால் சுமார் 2 கி.மீ. இருக்கும். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். பள்ளி ஆவணங்களில் என்னுடைய பெயர் என்ன இருக்கிறது என்றால் சோமசுந்தரம் என காணப்படுகிறது. கோபி என்று தான் கையொப்பமிடுவேனா என்றால் இல்லை, சோமசுந்தர் என கையொப்பமிடுவேன். இந்த வாக்குமூலத்தில் சோமசுந்தரம் என கையொப்பமிட்டிருக்கிறேனா என்றால் ஆமாம். எனக்கும், வாதிக்கும் உண்டான உறவுமுறை எப்படிப்பட்ட உறவுமுறை என்றால் என் தாத்தாவும், வாதியின் தாத்தாவும் அண்ணன் தம்பி உறவுமுறை. கூட பிறந்த உறவா என்றால் இல்லை. அருண்காந்தியின் தாத்தா பெயர் என்ன என்றால் முனிவெங்கடசாமி நாயுடு. அருண்காந்தியின் தகப்பனாருக்கு தகப்பனார் பெயர் முனிவெங்கடசாமி நாயுடு என்றால் அருண்காந்தியினுடைய அம்மாவுடைய அப்பா முனிவெங்கடசாமி நாயுடு ஆவார். அருண்காந்தியின் தகப்பனாரின் அப்பா பெயர் என்ன என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

முனிவெங்கடசாமி நாயுடுக்கும், என் தாத்தாவிற்கும் எப்படி சொந்தம் என்று தெரியாது என்றால் நாங்கள் பிறந்ததிலிருந்து நல்லது கெட்டது எல்லாவற்றிற்கும் நாங்கள் போவோம். நான் அவருக்கு உறவினர் என்று சொல்வது பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. கிருஷ்ணனுக்கு சொத்துக்கள் எப்படி பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால் சில சொத்துக்கள் வாங்கியது, சில சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள். சில சொத்துக்கள் பாக பாத்தியத்தின் மூலமாக பெறப்பட்டது, சில சொத்துக்கள் அவரது பாட்டி வகையறா மூலம் பெறப்பட்டது. பாக பத்திரம் மூலமாக எவ்வளவு சொத்துக்கள் பாத்தியதை என்றால் சுமார் 1 ஏக்கர் 70 செண்ட் இருக்கும். அந்த 1 ஏக்கர் 70 செண்ட் என்பது ஒரே இடத்தில் உள்ளதா அல்லது பகுதி பகுதிகளாக காணப்படுகிறதா என்றால் இரண்டு பகுதிகளாக காணப்படுகிறது. 1 ஏக்கர் 70 செண்ட் சொத்துக்கள் இரண்டு பிட்டுக்களாக உள்ளதாக நான் குறிப்பிடுகிறேன், ஆனால் பாக பிரிவு பத்திரம் Ex.A2ன் படி 10 பிட்டுக்களாக உள்ளது என்றால் இரண்டு பகுதிகளாக இருக்கிறது ஆனால் உட்பிரிவுகளாகவும் காணப்படுகிறது. கிரயமாக பெற்ற சொத்துக்கள் எவ்வளவு என்றால் அது பாக பத்திரத்திற்கு முன்பாக பெறப்பட்டது, அதனால் அதை பற்றிய விவரம் எனக்கு தெரியாது.

இந்த சொத்துக்கள் மூலமாக எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்றால் தேங்காய் மரம் சுமார் 150 மரங்கள் இருக்கிறது, வாழை இருக்கிறது, ஒரு வருடத்தில் ரூ.4,00,000/–மும் வரலாம், ஒரு வருடத்தில் வருமானம் வராமல் கூட இருக்கலாம். ரூ.55,00,000/–க்கு ஜே.சி.பி. வாகனம் பிரதிவாதியின் மகன் வாங்கியிருக்கிறார் என்று சொன்னால் ரூ.55,00,000/–க்கு வாங்கியது உண்மை, ஆனால் முழுக்க முழுக்க Finance–ல் வாங்கியிருக்கிறார். Finance–ல் வாங்கியதாக குறிப்பிட்டிருக்கிறேன், அதற்கு பணம் திரும்ப செலுத்தப்பட்டது எப்போது திரும்ப செலுத்தப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் மாதம் ஒன்று வீதம் ரூ.1,16,000/– தொகையை 12 அல்லது 13 மாதங்களுக்கு செலுத்தியிருக்கிறார். சாட்சி தாமே கூறுகிறார் அதற்கு பின்னிட்டு தொகை கட்டவில்லை என்று வாகனம் பறிமுதல் செய்யப்பட்டுவிட்டது. Finance பெற வேண்டும் என்றால் ஒரு குறிப்பிட்ட தொகையை செலுத்தினால் மட்டும் தான் பெற முடியும் என்றால் உண்மை தான். ஜே.சி.பி. வாகனம் வாங்கிய போது பிரதிவாதியின் மகன் எவ்வளவு முன்பண தொகையை செலுத்தினார் என்றால் ரூ.2,40,000/–ஐ ஜனவரி மாதம் 2020ல் செலுத்தினார்.

தாவா புரோநேட்டை நான் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. அதை எழுதியது வாதியின் அண்ணன் மோகன் என்று சொன்னால் அந்த விவரம் வழக்கறிஞர் மூலம் தெரிந்துக்கொண்டேன். அதே போல சாட்சி கையெழுத்து போட்டது யார் என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் வழக்கறிஞர் மூலம் தெரிந்துக்கொண்டேன். வாதி, பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததையும் நான் பார்க்கவில்லை, புரோநோட் எழுதி கொடுத்ததையும் நான் பார்க்கவில்லை என்றால் அதுபோன்று ஒரு சூழ்நிலை எழவில்லை. நான் பார்க்காத பட்சத்தில் கிருஷ்ணன் கையொப்பமிட்டாரா, இல்லையா என்ற விவரம் எனக்கு நேரிட்டு தெரியாது என்றால் அந்த சூழ்நிலை அமையவில்லை. கிருஷ்ணனின் கையொப்பத்தை அவர்களே மோசடியாக இட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்று கூறியுள்ளேன், அந்த கையெழுத்தை யார் போட்டார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் மோசடி செய்தவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. அப்படி என்றால் பணம் கொடுக்கல் வாங்கலை நான் பார்க்கவில்லை என்றால் கொடுக்கலும், வாங்கலும் நடைபெறவே இல்லை.

கொடுக்கல், வாங்கல் நடைபெறவே இல்லை என்று நான் சொல்வது பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. வழக்கு விவரங்களை நான் தெரிந்துக்கொண்டேனா என்றால் ஓரளவிற்கு தெரிந்துக்கொண்டேன். எதிருரையை தாக்கல் செய்யும் போது கிருஷ்ணன் என்பவருடன் நானும் சென்றேனா என்றால் எங்களுடைய வழக்கறிஞரிடம் போயிருந்தேன்.

எதிருரையை தாக்கல் செய்வதற்கான விவரங்களை நானும் சொன்னேனா என்றால் எனக்கு தெரிந்த விவரங்களை என் வழக்கறிஞரிடம் நானும் கூறிறேன். நான் கூறிய படி எதிருரையை எழுதினார்களா என்றால் அதுபற்றி தெரியாது. இந்த பண பறிமாற்றத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை, அந்த கடனுறுதி சீட்டு எழுதப்பட்டதையும் நான் நேரிட்டு பார்க்கவில்லை, நான் வாதிக்கு எந்தவிதத்திலும் உறவினர் அல்ல, பிரதிவாதியும், அவரது மகனும் கேட்டு கொண்டதற்கிணங்க, இதுபோல் ஒரு கொடுக்கல் வாங்கல் நடைபெறவில்லை என்றும், புரோநோட்டு மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றும், பொய்யான ஒரு வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் எனக்கு அவர் தூரத்து உறவினர், கொடுக்கல் வாங்கல் என்ற சம்பவமே நடைபெறவில்லை. நான் பொய்யான வாக்குமூலம் கொடுத்துவிட்டு, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.